வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P .1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 01.08.2024 வியாழக்கிழமை | இதழ் : 214 | பக்கங்கள் : 12

# மாகாண சபைக்கான தேர்தல் பழைய முறையில் நடத்தப்படும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

கொழும்பு, ஓக. 01

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும். பழைய முறைமையிலேயே (1988) மாகாண சபைகள் தேர்தலை நடத்த தான் எதிர்பார்த்துள்ளார் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை கொழும்பில் விடுதி ஒன்றில் பொதுஜன பெரமுன கட்சியினரை ஜனாதிபதி சந்தித்து பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைகள் தேர்தல் விகிதாசார முறைமையில் முன்னர் நடத்தப்பட்டது. நல்லாட்சி காலத்தில் மாகாண சபைகள் தேர்தலை தொகுதி, விகிதாசார முறை கொண்ட கலப்பு முறையாக மாற்றுவதற்கு பாராளுமன்றில் சட்டம் இயற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து எல்லை நிர்ணய பிரச்னையால் தொகுதிகளை நிர்ணயம் செய்வதில் இழுபறிநிலை ஏற்பட்டது. இதனால், மாகாண சபைகளுக்கு கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தலை நடத்த முடியாத நிலை நீடிக்கின்றது.

இந்த நிலையில், பழைய முறைமையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு சுமந்திரன் எம். பியால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் நிறை வேற்றுவதற்கு தயாராக 11



# ரி - 56 துப்பாக்கிகளுடன் இஸ்லாமிய மதகுரு கைது!

மட்டக்களப்பு, ஓக. 01

ரி -56 ரக துப்பாக்கிகள், அவற்றுக்கான ரவைகள், வாள் போன்றவற்றுடன் இஸ்லாமிய மத குரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மட்டக்களப்பு - வாழைச்சேனை - பதுறியா நகரில் வைத்து விசேட அதிரடிப் படையினர் அவரைக் கைதுசெய்தனர்.

பொலநறுவை இராணுவ புலனாய்வு 11

# கட்சியின் தீர்மானத்தை மீறுவோர் நீக்கப்படுவர்!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஓக. 01

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி எடுத்த தீர்மானத்துக்கு எதிராக செயல்படும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் பொறுப்புகளில் இருந்து நீக்கப்படுவர் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

தொகுதி அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கட்சி பொறுப்பாளர் பதவிகளில் இருந்து இவ்வாறு பலர் நீக்கப்படவுள்ளனர். குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் உன்னிப்பாக ஆராயப்பட்ட பின்னரே இந்த 11

# இந்த மாதத்தில் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி

கொழும்பு, ஓக. 01

பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி இந்த மாதத்துக்குள் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு 87 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். 43 ஆயிரத்துக்கும் 11

# கழுத்து நெரிக்கப்பட்டு இளைஞன் படுகொலை!

## பிரேத பரிசோதனையில் தகவல்

முல்லைத்தீவு, ஓக. 01

முல்லைத்தீவில் குளத்திலிருந்து நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டார் என்று பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை மல்லாவி - யோகபுரத்திலிருந்து பாண்டியன்குளத்துக்கு 20 இலட்சம் ரூபாயுடன் ஆனந்தராசா ஜீவன் என்பவர் சென்றிருந்தார். அவருடனான, தொடர்பு இரவு 8.40 மணியுடன் துண்டிக்கப்பட்டது. இதையடுத்து, அவரின் நண்பர்களும் உறவினர்களும் அவரை தேடிச் சென்றனர். 11

# கட்டுப்பணம் செலுத்தினார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 01

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸ கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைமையகத்துக்கு நேற்று சென்ற ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும 11

# ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் தாக்குதலில் பலி!

## இலங்கை தலைவர்கள் கண்டனம்



கொழும்பு, ஓக. 01

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இராணுவ பிரிவான ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹானியே கொல்லப்பட்டார். ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இஸ்ரேல் நடத்திய 11

# ஆயிரம் கருக்கலைப்புகள் நாளாந்தம் நிகழ்கின்றன!

## மருத்துவர்களின் கூட்டமைப்பு

கொழும்பு, ஓக. 01

நாளாந்தம் ஆயிரம் சட்டவிரோத கருக்கலைப்பு சம்பவங்கள் பதிவாகின்றன என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழில்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு ஒன்றிலேயே இந்த விடயம் 11

# எனது தலைவர் மகிந்தவே ஆனால், ஆதரவு ரணிலுக்கு

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 01

எனது முன்னுதாரண - மானசீகத் தலைவர் மகிந்த ராஜபக்ஷவே. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்கிறேன். ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாக அவரைத் தெரிவு செய்தாலேயன்றி பொதுஜன பெரமுன கட்சியினரை பாதுகாக்க வேறு மாற்று வழிகள் எதுவும் கிடையாது - இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 11

# காணி, பொலிஸ் அதிகாரம் கேட்பதை வடக்கு இளைஞர்கள் கைவிட்டுள்ளனர்!

## நாமல் ராஜபக்ஷ எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஓக. 01

வடக்கின் ஒரு பகுதி இளைஞர்கள் காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையை கைவிட்டுள்ளனர் என்று கூறியுள்ள நாமல் ராஜபக்ஷ எம். பி., அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதை பொதுஜன பெரமுன கட்சி எதிர்க்கிறது என்றும் கூறினார்.

தெற்கில் கூறுவதைப் போன்றே வடக்குக்கு சென்றும் நான் கூறுகின்றேன். சில தரப்பினரை போன்று வடக்கில் ஒன்றையும் தெற்கில் ஒன்றையும் நாங்கள் 11

# சிறீ லங்கா சுதந்திர கட்சியும் ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பு

## ஜனாதிபதி ஊடக பிரிவு

கொழும்பு, ஓக. 01

செப்ரெம்பர் 21இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயல் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த அந்தக் கட்சியின் மத்திய 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒருவர் அழகான பெண் ஒருவரை காதலித்தார். ஆனால், அவருக்கு கண்பார்வை சற்று குறைவு. இந்த சமாச்சாரம் அந்தப் பெண்ணுக்கு தெரிந்திருக்கவில்லை.

ஆகவே அவர் கண் டாக்டரிடம் சென்று ஆலோசனை கேட்டார்.

"கண்ணுக்கு கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தால் அந்தப் பெண் எப்படி என்னைக் காதலிப்பாள்? கண்ணாடி இல்லாமல் பார்த்தால், அவளுடைய முகம்கூட எனக்கு மங்கலாக - சரியாகத் தெரியவில்லையே! நான் கண்ணாடி போட்டபடி அவள் எதிரில் போகக்கூடாது. உடனே என்னை நிராகரித்து விடுவாள். என்ன செய்யலாம்?"

டாக்டர் ஆலோசனை கூறினார்: "ஒன்று செய்யலாமே! வெகுதொலைவு வரை உம்மால் பார்க்க முடிவது போல் நடியும். இப்படி அவள் நம்பும்படி ஏதாவது செய்து பாரும்!".

அவரும், இதை செய்து பார்த்துவிடுவது என்று முடிவு செய்தார். ஒருநாள் பூங்காவில் உட்கார்ந்திருந்தபோது அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. தூரத்தில் இருந்த ஒரு மரத்தில் ஒரு தையல் ஊசியைக் குத்திவிட்டு வந்தார். நல்ல கண்பார்வை இருந்தால்கூட அவ்வளவு தொலைவில் உள்ள ஊசியை யாராலும் பார்க்க முடியாது.

அவர் ஒரு மாலை வேளையில், அந்த மரத்திலிருந்து சுமார் நூறு அடி தொலைவில் தன் காதலியுடன் உட்கார்ந்திருந்தார். திடீரென அவளிடம் "அதோ அந்த மரத்தில் பொறுப்பில்லாமல் யாரோ ஒரு தையல் ஊசியை குத்தி வைத்திருக்கிறார்களே!" என்று கூறினார்.

அப்பெண்ணுக்கோ ஏற்கனவே அவரின் கண்பார்வையின் மேல் சந்தேகம் வேறு இருந்தது. அப்படி இருக்க இவ்வளவு தொலைவில் ஒர் ஊசி இருப்பதை அவரால் எப்படி காண முடிந்தது என்று ஐயம் கொண்டாள். மேலும், அவளாலும் அதைப் பார்க்க முடியவில்லை. அந்த மரத்தையும்கூட சரியாக பார்க்க முடியவில்லை. "எனக்கு ஊசி ஒன்றும் தெரியவில்லையே" என்று கூறினாள்.

அவரோ, பந்தாவாக எழுந்து, "நான் போய் அதை எடுத்து வருகிறேன்" என்று கூறியபடி நடக்கலானார். ஒன்றிரண்டு அடி வைத்ததுமே தொப்பென்று தரையில் விழுந்தார். ஏனென்றால் எதிரில் ஓர் எருமை மாடு நின்று கொண்டிருந்தது. இது அவர் கண்ணுக்குத் தெரியவில்லை.

அரசியல் கட்சிகளில் முக்கிய தலைவர் ஒருவர் இருப்பார். அவரைச்சுற்றி அடுத்த நிலை தலைவர்கள் மூவர் அல்லது நால்வர், ஏன் ஐவர் கூட இருக்கலாம். அவர்களுக்கு அடுத்த நிலையில் மூன்றாம் மட்டத் தலைவர்கள் இருப்பார்கள். அவர்களின் தொகை இரண்டாம் மட்டத்தலைவர்களின் தொகையில் இரு மடங்காக இருக்கும். உதாரணத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியை எடுத்துக்கொண்டால், சஜித் தலைவர். அவருக்கு மிக நெருக்கமான அடுத்த கட்டத் தலைவர்கள் என்றால், இப்போது ரஞ்சித் மத்தும பண்டார, லக்ஷ்மன் கிரியெல்ல, எரான் விக்கிரமரட்ண, கபீர் ஹாசிம் என்று சொல்லலாம்.

இப்படித்தான் அரசியல் கட்சிகளில் தலைவர்கள் இருப்பார்கள்.

விரைவில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் ஒரு தலைவரின் முதல் அடுக்கு தலைவர்களில் அவரும் ஒருவர். அவரை நேற்று ஒரு வைபவத்தில் சந்திக்க முடிந்தது. நண்பர் ஒருவர், என்னை அவருக்கு அறிமுகம் செய்துவைத்ததும் அவர் உடனே என்னிடம் கேட்டது: "வடக்கில் தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?".

சொல்லவேண்டும் போலத் தான் இருந்தது. ஆனாலும், அவரோடு எதற்கு விவாதிப்பான் என்ற எண்ணத்தில் சொன்னேன்: "இன்னும் மக்கள் முடிவெடுத்தாக தெரியவில்லை. சில நாட்களின் பின்னர்தான் தெளிவாக நிலைமை தெரியவரும்" என்றேன்.

அவர் சொன்னார், "இல்லையில்லை... ரி. என். ஏ. எங்களோடுதான் இருக்கிறது" என்று.

"அட மடையா? இப்ப ரி. என். ஏ. என்ற ஒன்றே இல்லையே" என்று சொல்ல வேண்டும் போலத்தான் இருந்தது. நான் சற்று அமைதியாக நிற்க, அவர் சொன்னார்: "..... அவர் சொல்லிவிட்டார். இனி தமிழ் மக்கள் எங்களுக்குத் தான் வாக்களிப்பார்கள்" என்று. அவர் சொன்ன பெயரை நாகரிகம் கருதி நான் இங்கு தரவில்லை. ஆனால், முன்னர் அமைதியாக இருந்ததுபோல இப்போதும் இருக்கமுடியவில்லை. நான் அவருக்கு சொன்னேன்: "அவர் தனக்கு போடச் சொன்னாலும் தமிழ் மக்கள் அவருக்கு போடுவார்களோ தெரியவில்லை. இந்த இலட்சணத்தில் அவர் சொல்லிவிட்டார் என்பதால் உங்களுக்குத்தான் தமிழ் மக்கள் போடுவார்கள் என்கிறீர்களோ?" என்றேன். அவருக்கு எனது பதில் இரசிக்கக்கூடியதாக இல்லை என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது.

"ரி. என். ஏ. உங்களோடு தான் என்றீர்களே, அது யார் யார்?" என்று கேட்டேன். அவர் பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது தான் எனக்கு மேலேயுள்ள கதை ஞாபகத்துக்கு வந்தது.

எந்த வேஷமும் நெடுநேரம் நிலைத்திருக்காது! உங்கள் வேஷத்தை மக்கள் கண்டுபிடிக்க வெகு நேரமாகாது. ஆனாலும், மரியாதைக்காக நீங்கள் வேஷம் போடுகிறீர்கள் என்று உங்களிடம் அவர்கள் சொல்வதில்லை. ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்வது இப்போதெல்லாம் நாகரிகமாகி விட்டது.

- ஊர்க்குருவி.

# 200 கோடி டொலர் முதலீடு இந்த ஆண்டில் கிடைக்கும்!

### அமைச்சர் திலும் அமுனுகம



கொழும்பு, ஓக. 01

இந்த ஆண்டில், எமது இலக்கு 100 கோடி டொலர் என்ற போதிலும், 200 கோடி டொலர் வரை முதலீடுகளை ஈர்க்க முடியும் என வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 80 கோடி டொலர் பெறுமதியான 35 முதலீட்டு வேலைத் திட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம். இந்த ஆண்டில், எமக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கு 100 கோடி டொலர் ஆகும். எனினும், தற்போது நாம் 80 கோடி டொலரை எட்டியுள்ளதால் ஆண்டிறுதிக்குள் 200 கோடி டொலர் பெறுமதியான முதலீடுகளை ஈர்க்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தற்போது நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் முதலீடுகள் குறைவடையலாம். இது எந்தவொரு நாட்டிலும் தேர்தல் காலங்களில் வழமையாக நடைபெறுவதாகும். எவ்வாறிருப்பினும் இந்தக் காலப்பகுதியில் முதலீட்டு சபையை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பொருளாதார பரிவர்த்தனை சட்டத்துக்கமைய பொருளாதார ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

இதன் பணி பொருளாதாரம் குறித்த பிரசாரங்களை முன்னெடுப்பதாகும். இதற்கான செயல்திட்டங்கள் இலங்கையில் முதலீடு என்ற தொனிப்பொருளின் கீழ் அதன் முகவரகங்களால் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மேலும் நாடுகளுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன - என்றும் தெரிவித்தார்.

(ஐ)

## பால் மா விலையை குறைக்க நடவடிக்கை?

கொழும்பு, ஓக. 01

பால் மா விலையை குறைப்பது தொடர்பில் பால் மா இறக்குமதியாளர்களுடன் அடுத்த சில தினங்களில் கலந்துரையாடல் நடத்தப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பால்மாவின் விலையை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் விலையை கணக்கிடுமாறும் நுகர்வோர் அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நுகர்வோருக்கு தேவையான சலுகைகளை வழங்குவதற்கு இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 116 பிரதிநிதிகள் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் 116 பேர் கொண்ட குழு நேற்று புதன்கிழமை கூடித் தீர்மானித்தனர்.

ஜனாதிபதியின் வெற்றிக்கு ஆதரவளிப்பதாக அந்தக் குழுவினர் உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

116 பேர் கொண்ட இந்தக் குழு சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்[illegible] என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஆதரவை பெறுவதற்கு ரணில் மகிந்தவுடன் பேச வேண்டும்!

### பிரதி சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 01

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மீண்டும் பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தான் இந்த வேண்டுகோளை நேரடியாக விடுத்துள்ளளார் என்றும் அவர் கூறினார்.

"நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். ஆனால், நீங்கள் ராஜபக்ஷக்களின் ஆதரவை பெற்றால் அது பெரும் வெற்றியாக அமையும் என ஜனாதிபதியிடம் நான் தெரிவித்தேன். முன்னாள் ஜனாதிபதி புரிந்துணர்வுமிக்கவர் அவர் நிச்சயம் ஆதரிப்பார்.

"பொதுஜன பெரமுனவின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த எண்ணத்தை கொண்டுள்ளனர்", என்றும் தான் குறிப்பிட்டார் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## 13 வயது சிறுமி கர்ப்பம் மைத்துனர் கைதானார்!

கொழும்பு, ஓக. 01

பாட்டியிடம் வளர்ந்த 13 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய இளைஞரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

சிறுமியை அவரின் மாமன் மகனான 18 வயது இளைஞரே பலமுறை வன்புணர்வுக்கு உட்படுத்தி கர்ப்பமாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை - ஹொரணையை சேர்ந்த சிறுமி பெற்றோர் இல்லாத நிலையில் தனது பாட்டியின் பராமரிப்பில் இருந்துள்ளார்.

இந்த நிலையில், அவரின் மாமன் மகனால் அவர் பலமுறை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். தனக்கு நேர்ந்தது குறித்து சிறுமி தனது பாட்டியிடம் தெரிவித்தார். எனினும், பாட்டியின் அக்கறையின்மையால் சிறுமி பாதிக்கப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இளைஞரை கைது செய்துள்ள களுத்துறை பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

## அரச அதிகாரிகளுக்கு வழிகாகட்டல் கோவை!

கொழும்பு, ஓக. 01

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச அதிகாரிகள் மற்றும் அரச செயல்பாடுகள் தொடர்பான வழிகாட்டல் கோவையை வெளியிட மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரச அதிகாரிகளின் பக்கச்சார்பான நடவடிக்கைகளால், பொதுமக்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்று மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பில் ஆராய்ந்து வழிகாட்டுதல் கோவை தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
01.08.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆடி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அனைவரும் ரணிலின் வியூகத்துக்குள்ளா?

ரணிலின் தேர்தல் வியூகம் அனைவரையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. சஜித் பிரேமதாஸ முன்னணியில் இருக்கின்றார் - அநுரகுமார திஸநாயக்கா முன்னணியில் இருக்கின்றார் என்னும் கதைகள் ஓய்ந்து ரணிலுடன் எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைகின்றனர் - ரணிலை எந்தக் கட்சிகள் ஆதரிக்கின்றன - என்றவாறு தென்னிலங்கையின் தேர்தல் களம் மாறியிருக்கின்றது. இது எவருமே எதிர்பாராத விவாதம். ரணில் எந்த அடிப்படையில் போட்டியிட போகின்றார் என்னும் கேள்விக்கு பெரும்பாலானவர்களின் பதில் - அவர் ராஜபக்ஷக்களோடுதான் இணைந்திருப்பார் - அவருக்கு வேறு தெரிவுகள் இல்லை என்றே இதுவரையில் இருந்தது. ஆனால் அவரோ, சுயேச்சை வேட்பாளராக தன்னை அறிவித்திருக்கின்றார்.

அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்னும் அடையாளத்துடன்தான் மீண்டும் அதிகார அரசியலுக்குள் நுழைந்தார். காணாமல் போய்விட்டார் - இனி அரசியலில் அவரை ஒருபோதுமே காணமுடியாது என்னும் ஆருடங்களின் மத்தியில்தான் ரணில் அவரின் அடுத்த ஆட்டத்தை ஆரம்பித்தார். ஒருவேளை சஜித் அன்றைய சூழலில் சரியாக ஆடியிருந்தால் ஒருவேளை ரணில் காணாமலும் போயிருக்கலாம். சஜித்தோ மேடை சரியில்லை என்று கூறிக் கொண்டிருந்தார். ஆனால், எந்த மேடை கிடைக்கின்றதோ அதில் ஆடிக் காட்டுபவனே சாணக்கியன் என்பதே ரணிலின் கணக்காக இருந்தது.

ரணிலை பலரும் நரி என்பதுண்டு. அரசியலில் நரியாக இருப்பது தேவையானதுதான். ஏனெனில், அதிகாரத்துக்கான ஆட்டத்தில் நரிகள்தான் இருக்கின்றன என்றால் நரியாக இருப்பது மட்டும்தான் ஒரேயொரு புத்திசாதுர்யமான நகர்வாகும். ஆனால், இந்த விடயத்தை தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் மட்டும் ஒருபோதும் கற்றுக்கொள்ள முயற்சிப்பதில்லை - கற்றுக் கொள்ள மாட்டோம் என்று அடம்பிடிக்கின்றனர்.

ஒரு தேர்தல் களம் திறக்கப்பட்டுவிட்டது. இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்ஷ எதிர்ப்பின் அடிப்படையில்தான் தமிழ் வாக்குகள் கையாளப்பட்டிருக்கின்றன. இந்தத் தேர்தலில் அந்தத் துருப்புச்சீட்டை தமிழ்த் தேசிய அரசியலில் எடுக்க முடியாது. ஏனெனில், ராஜபக்ஷக்கள் அதிகார ஆட்டத்துக்குள் இப்போது இல்லை. ஒருவேளை ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வியூகம் ராஜபக்ஷக்களை சார்ந்திருந்தால் தமிழ்த் தேசியக் கட்சிகள் இலகுவாக ரணிலிடமிருந்து விலகியிருக்கலாம். ஆனால், இப்போது அது முடியாது.

இந்த நிலையில் ஒப்பீட்டடிப்படையில் ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிப்பது என்றால் யாரை ஆதரிப்பது என்னும் முடிவுக்கு வரவேண்டும். ஆனால், இதனை வெளிப்படையாக செய்ய வேண்டுமாயின், அவர்களை ஆதரிப்பதற்கான காரணத்தை பொது வெளியில் முன்வைக்க வேண்டும். ஆனால், எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் இதுவரையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமான பதில்களை வழங்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் ஒரேயொரு தெரிவாக தமிழ் மக்கள் முன்னால் இருக்கின்றது. ஆனால், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கவில்லை. தனிநபர்கள் ஆதரவு என்னும் நிலையிலேயே தமிழ் அரசுக் கட்சியின் நகர்வு அமைந்திருக்கின்றது. அவ்வாறாயின், தமிழ் அரசுக் கட்சி ரணிலின் வியூகத்துக்குள் சிக்கிவிட்டதா?

தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருந்த தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் தற்போது ஓர் உடன்பாட்டுக்குள் இருக்கின்றன. இவ்வாறான கட்சிகள் தொடர்ந்தும் பயணிக்கும் உறுதிப்பாட்டுடன் இருக்கின்றன. ஒருவேளை இவ்வாறான கட்சிகளில் ஒரு கட்சியோ அல்லது சில கட்சிகளோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டிலிருந்து வெளியேறுமாயின் அவர்களும் ரணிலின் வியூகத்துக்குள் சிக்கிவிட்டனரா என்னும் கேள்வியே மேலோங்கும் அல்லது அவர்கள் சஜித்தின் வியூகத்துக்குள் சிக்கியிருக்க வேண்டும்.

தமிழ் பொது வேட்பளார் நிலைப்பாட்டை எதிர்ப்பதற்கான தர்க்க நியாயங்கள் எவரிடமும் இல்லை. இந்தப் பின்புலத்தில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்தும் எதிர்க்குமாயின், அது நிச்சயமாக தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரின் வியூகத்துக்குள் சிக்கிவிட்டதாகவே நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

# 9ஆவது உலக தமிழ் பூப்பந்தாட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 01

ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்ட தொடர் நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக உள்ளக அரங்கில் பூப்பந்தாட்ட தொடருக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் கலந்துகொண் டார்.



நேற்றைய ஆரம்ப நிகழ்வில் 12 நாடுகளைச் சேர்ந்த 514 வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்தத் தொடரின் இறுதி போட்டிகள் எதிர் வரும் 04 ஆம் திகதி நடைபெறவுள்ளன. 33 பிரிவுகளின் கீழ் இந்த போட்டிகள் நடைபெறுவதுடன், சர்வதேச வீரர்களுக்கான பிரிவும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (ஐ-2)

# இலவச கலை வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 01

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இலவச கலை வகுப்புகளை நடத்தவுள்ளது.

பண்ணிசை, சங்கீதம் , வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நடனம், வீணை, கதாப்பிரசங்கம், புராண படனம், பேச்சு திறன் ஆகியவற்றுக்கே இந்த வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இந்த வகுப்புகள் நல்லை ஆதீனத்தில் இயங்கிவரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிமனையிலும் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளில் பொருத்தமான இடங்களிலும் நடைபெறவுள்ளன.

இந்தப் பாடங்களை கற்பிக்கவல்ல வளவாளர்கள் தமது சுயவிவர கோவைகளை பணி நாட்களில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிமனையில் வழங்க முடியும்.

இதேபோன்று, கற்கை நெறியை பயில விரும்புவோர் தங்கள் பதிவுகளை பணிநாட்களில் மேற்கொள்ளமுடியும். விண்ணப்ப முடிவுக்காலம் எதிர் வரும் 31ஆம் திகதியாகும்.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 077 004 4046 , 077 582 1041 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அநிருத்தன் தெரிவித்துள்ளார். (ஐ)

# சீன உதவியில் கிடைத்த வலைகள் யாழ். வந்தன!

யாழ்ப்பாணம், ஓக. 01

சீன அரசாங்கத்தின் நிதியுதவியில் மீனவர்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி வலைகள் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 26 ஆயிரத்து 700 வலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள யாழ். மாவட்ட உதவி பணிப்பாளர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்த வலைகள் கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிமனையில் களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாண மீனவர்களுக்கு வலைகள் வழங்குவதற்காக 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோசடியில் ஈடுபட்டு வந்த 53 வெளிநாட்டவர்கள் கைது

சிலாபம், ஓக. 01


புத்தளம் பிரதேசத்தில் இணைய வழி மோசடியில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 53 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் 44 ஆண்களும் 9 பெண்களும் அடங்குவர்.

சந்தேக நபர்கள் புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்து இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று தெரிய வந்தது.

சந்தேக நபர்களிடமிருந்து 98 கைபேசிகள், 44 கணினிகள் மற்றும் பல சிம் அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 01 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 16
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வெளி வட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் திடீர் லாபம்.

**இடபம்**
உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சி தொடங்கும் நாள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும்.

**மிதுனம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கடகம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**சிம்மம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுங்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உறவினர்கள், சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
சகோதரர் வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். தலைமையின் ஆதரவு கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். மாளிப்பீர்கள். புதுவேலை அமையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். நன்மைகள் உண்டாகும்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

# பாடசாலைக்கு செல்ல மறுத்து அழும் குழந்தைபோல செயல்படும் முதல்வர்!

## ஸ்டாலின்மீது அண்ணாமலை விமர்சனம்

சென்னை, ஒக. 01

பாடசாலைக்கு செல்லமாட்டேன் என்று அடம்பிடித்து அழும் குழந்தைகள் போன்றுதான் முதல்வர் மு. க. ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

தமிழக பா. ஜ. க. விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு மாநில தலைவர் அமர் பிரசாத் ரெட்டி எழுதிய 'கனெக்டிங் 1. 4 பில்லியன்' புத்தகம் வெளியீட்டு விழா சென்னை தி. நகர் கமலாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அச்சம் காரணமாகத்தான் புதுடில்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கவில்லை.

மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதால் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று ஸ்டாலின் கூறினார். அவர் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி 2022, 2023 நிதி ஆயோக் கூட்டத்திலும் பங்கேற்கவில்லை. நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க அவருக்கு அச்சம்.

அதனால்தான் அவர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை- என்றார். (எ)



# வீரப்பனை தேடியபோது படைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு?

## உத்தரவுக்கு இடைக்கால தடை

சென்னை, ஒக. 01

வீரப்பன் தேடுதல் வேட்டையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூடுதல் இழப்பீடு வழங்குவது தொடர்பான தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சந்தன மரக்கடத்தலில் ஈடுபட்டு வந்த வீரப்பனை பிடிப்பதற்காக கடந்த 1995 ஆம் ஆண்டு சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்பட்டு தேடப்பட்ட நிலையில், 2004ஆம்ஆண்டு பொலிஸார் வீரப்பனை சுட்டுக் கொன்றனர்.

இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்ட 89 பேருக்கு உரிய இழப்பீடு வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, தமிழக மற்றும் கர்நாடக அரசுகளுக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கே உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. (எ)



# தமிழகத்தில் வெள்ள அபாயம்!

சென்னை, ஒக. 01

மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டிய நிலையில் தமிழகம் முழுவதும் 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அணையின் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியதை அடுத்து, காவிரியில் 81, 500 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக கர்நாடக அணைகள் நிரம்பின. அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பியதை அடுத்து காவிரியில் உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. இதன்காரணமாக காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த நிலையிலேயே 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# கேரளாவுக்கு தமிழகம் உதவி

சென்னை, ஒக. 01

வயநாடு நிலச்சரிவு தொடர்பில் கேரள முதல்வரிடம் கேட்டறிந்த முதல்வர் மு. க. ஸ்டாலின், நிவாரணப் பணிகளுக்காக 5 கோடி ரூபாய் நிதி வழங்குவதாக அறிவித்துள்ளார். மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காக உயர் அதிகாரிகள் தலைமையில் சிறப்புக் குழுவினர் உடனடியாக கேரளா செல்ல உத்தரவிட்டுள்ளார். (எ)

# செந்தில் பாலாஜியின் மனு மீள ஒத்திவைப்பு

சென்னை, ஒக. 01

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் குற்றச்சாட்டுப் பதிவை ஒத்திவைக்கக்கோரி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்துள்ள சென்னை முதன்மை அமர்வு நீதிபதி, நாளை 2ஆம் திகதி அவரை மீண்டும் மன்றில் முற்படுத்த உத்தரவிட்டுள்ளார். (எ)

# விஜயபாஸ்கருக்கு நிபந்தனை பிணை

கரூர், ஒக. 01

100 கோடி ரூபாய் பெறுமதியான நில மோசடி வழக்கில் முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கருக்கு பல்வேறு நிபந்தனைகள் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டது.

நீதிமன்றத்தில் பிணைத் தொகையாக 25, 000 ரூபாய் செலுத்த வேண்டும். நாள்தோறும் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறையும், கரூர் சி. பி. சி. ஐ. டி. அலுவலகத்தில் காலை, மாலை இரு வேளையும் கையொப்பம் இடவேண்டும் என்பன உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைகளிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு இறப்பு சான்றிதழ் என்றால் கொன்றது யார்?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி




யாழ்ப்பாணம், ஒக. 01

**"இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்பு சான்றிதழ்தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?" - இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.**

முல்லைத்தீவில் நேற்று புதன் கிழமை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், பங்கேற்றவர்கள், "கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே", "இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்பு சான்றிதழ் தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?", "காணாமல் போனோர் அலுவலகம் ஒரு கண்துடைப்பு நாடகம்", "சர்வதேச விசாரணையே தேவை, இழப்பீடுகள் வேண்டாம், எமக்கு பிள்ளைகள் வேண்டும்", என்று கோஷமிட்டனர்.

(ஐ)

# மூன்று இந்திய மீனவர்களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை!

யாழ்ப்பாணம், ஒக. 01

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 3 இந்திய மீனவர்களுக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன், 3 படகுகளின் உரிமையாளர்களுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

இலங்கை கடலில் நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த ஜூலை, ஜூன் மாதங்களில் பல்வேறு திகதிகளில் கைது செய்யப்பட்ட 64 மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, இரண்டாவது தடவையாக இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்த மூவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கைதானவர்களில் 3 படகுகளின் உரிமையாளர்கள் இருந்தமையால் அவர்களுக்கு தலா 40 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. தண்டப்பணம் செலுத்தாவிடின் 6 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும், அவர்களின் படகுகளை அரசுடைமையாக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

மேலும், 23 பேருக்கு ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த ஜூலை 01ஆம் திகதி, 11ஆம் திகதி கைதான 38 இந்திய மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஐ)

# அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பருக்கு ஒத்திவைப்பு!

தென்மராட்சி, ஒக. 01

சாவகச்சேரி மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ அத்தியட்சகருக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மருத்துவ அத்தியட்சகர் தமக்கு அவதூறு ஏற்படுத்தினார், கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்பன உள்ளிட்ட ஐந்து முறைப்பாடுகள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது.

இதன்போது, முன்னாள் மருத்துவ அத்தியட்சகர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, வழக்கின் இரு தரப்பினரும் மருத்துவத் துறை சார்ந்தவர்கள் என குறிப்பட்டதுடன் வழக்கை இணக்க சபைக்கு மாற்றுமாறு மன்றில் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அதற்கு முறைப்பாட்டாளர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். அத்துடன், மருத்துவர் பொலிஸ் நிலையம் சென்று தான் குற்றஞ்சாட்டிய நபர்கள் தொடர்பிலான ஆதாரங்களை இதுவரையில் வழங்காமை தொடர்பிலும் மன்றில் சுட்டிக்காட்டினார்கள்.

இதனை தொடர்ந்து வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், மருத்துவர் அர்ச்சுனாவை பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் ஆதாரங்களை சமர்ப்பிக்கவும் கட்டளையிட்டது.

(ஐ)

# வித்தியா கொலை மேன்முறையீடு; விசாரணை ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, ஒக. 01

வித்தியா படுகொலை தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆறு பிரதிவாதிகளின் மேன்முறையீட்டு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட, ஏ. எச். எம். டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ 5 நீதியரசர்கள் கொண்ட அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளில் ஒருவர் உயிரிழந்துவிட்டார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பிரதிவாதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி, இந்த வழக்கு தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் இந்த பிரதிவாதிகள் எட்டு வருடங்களுக்கும் மேலாக சிறைச்சாலையில் உள்ளனர் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், வழக்கு தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி மன்றாடியார் நாயகம் ஆயிஷா ஜினசேன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த பிரதிவாதிகள் கொலை, சதி மற்றும் சட்டவிரோத குடியேற்றம் ஆகிய குற்றங்களில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் பிரதிவாதிகள் இருவர் விடுதலை செய்யப்பட்டனர் என்று சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த ஐந்து பேர் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, இந்த வழக்கு தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்தது.

அதன்பிறகு, இந்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை ஜனவரி 20ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைத்து உத்தரவிட்டது. (ஐ)

# 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வவுனியாவில் வழக்கு

வவுனியா, ஒக. 01

வவுனியாவில் 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜூலை 1ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை திடீர் சோதனைகளை நடத்தியது.

இதில், சரியான தராசை பயன்படுத்தாமை, விற்பனைக்கு பொருளை மறுத்தமை, விலை அழிக்கப்பட்டிருந்தமை, விலை குறிக்கப்படாமை, காலாவதியான பொருள்களை வைத்திருந்தமை, தகவல் குறிக்கப்படாமை, உத்தரவாதம் வழங்காமை போன்றன தொடர்பில் 54 வழக்குகளும், வெதுப்பகங்கள் தொடர்பில் 6 வழக்குகளுமாக 60 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகரம், கோவில்குளம், வைரவபுளியங்குளம், குருமண்காடு, பட்டானிச்சூர், வேப்பங்குளம், நெளுக்குளம் உள்ளிட்ட பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தான தேர் திருவிழா

தென்மராட்சி, ஒக. 01

சாவகச்சேரி ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவில், இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வைரவர் பொங்கலும் நடைபெறவுள்ளன. (ஐ)

# பொலிஸாரை படம் எடுக்க முயன்ற இளைஞர் கைது!

முல்லைத்தீவு, ஒக. 01

பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து பொலிஸாரை அச்சுறுத்தும் வகையில் படம் எடுக்க முயன்ற இளைஞரை தாம் கைது செய்துள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் பிரபல வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான காணியை வேறு ஒருவர் அடாத்தாக உரிமை கோரி வந்தார்.

இந்தநிலையில், காணி விவகாரம் தொடர்பில் தம்மை வன்முறை கும்பல் அச்சுறுத்தியதாக வர்த்தகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணையின்போது பொலிஸாருடன் முரண்பட்டார் என்று கூறி பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, கைதான பெண்ணின் மகன் நேற்றுமுன்தினம் இரவு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து பொலிஸாரை அச்சுறுத்தும் விதமாக தனது கைபேசியில் படம் எடுக்க முயன்றார் என்றும் இதையடுத்தே தாம் அவரை கைது செய்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# கிளிநொச்சி மீனவர்க்கு வலைகள்; சீன அரசாங்கம் அனுப்பி வைத்தது!

கிளிநொச்சி, ஒக. 01

கிளிநொச்சியை சேர்ந்த 1060 மீனவர்களுக்கு வழங்குவதற்காக சீன அரசாங்கம் மீன்பிடி வலைகளை அனுப்பி வைத்துள்ளது.

சீன அரசாங்கம் வடக்கு, கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் பொருத்து வீடு, அரிசி என்பவற்றை ஏற்கனவே வழங்கியுள்ளது.

இந்தநிலையில், மற்றோர் உதவியாக மீனவர்களுக்கு மீன்பிடி வலைகளை நேற்று கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்தது.

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பணிமனையில் களஞ்சியப்படுத்தப்பட்ட இந்த வலைகள் விரைவில் மீனவர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவும் உள்ளார்

## சொல்கிறார் திஸ்ஸ குட்டியாராச்சி எம். பி.

கொழும்பு, ஓக. 01

**பொருளாதார மற்றும் வர்த்தக நோக்கில் பார்த்தால் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேராவும் இளைஞர் மற்றும் பொருளாதார கண்ணோட்டத்தில் பார்த்தால் நாமல் ராஜபக்ஷவும் இருக்கின்றனர் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சி தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பொதுஜன பெரமுனவுக்கு ஏற்கனவே 30 இலட்சம் என்ற நிலையான வாக்குகள் இருக்கின்றன. கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு வாக்களித்த ஏழு பேரில் நால்வருக்கு வேறு கருத்துகள் இருக்கலாம். இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நான்கு பிரதான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் பொதுஜன பெரமுனவின் அதிர்ஷ்ட வேட்பாளர் ஜனாதிபதியாகும் சாத்தியம் இருக்கிறது.

இந்த நிலையில், நாளை (இன்று) வியாழக்கிழமை தமது ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்க பொதுஜன பெரமுன கூடவுள்ளது. பிரபல வர்த்தகர் தம்மிக பெரேராவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்பது கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டுமென கூறுபவர்களின் நிலைப்பாடாக உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# பொலிஸ் மா அதிபர் விவகாரம்; மகிந்த நாடு திரும்பியதும் தீர்வு

கொழும்பு, ஓக. 01

பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து சபாநாயகர் இலங்கைக்கு வந்தடைந்தவுடன் விசேட சந்திப்பை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தற்போது ஈரானில் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்க அங்கு சென்றுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பதவியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து சபாநாயகரும் பிரதம நீதியரசரும் இணைந்து தீர்வுக்கு வர வேண்டும் என்று முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்லைன் மூலமான ரயில் முன்பதிவு நேரத்தில் மாற்றம்

கொழும்பு, ஓக. 01

ஒன்லைன் மூலம் ரயில் ஆசனங்களை முன்பதிவு செய்யும் செயல்பாடு எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்க ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஒன்லைன் ரயில் ஆசன முன்பதிவு முறை தொடர்பான அறிவித்தல்களும் அன்றைய தினம் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒன்லைன் முன்பதிவுகள் தற்போது, இரவு 7 மணிக்கே ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யுவதிக்கு பாலியல் தொந்தரவு; ஓய்வுபெற்ற அதிபர் கைதானார்!

கொழும்பு, ஓக. 01

பேருந்தில் யுவதி ஒருவருக்கு பாலியல் ரீதியாக தொந்தரவு அளித்தார் என்று கூறப்படும் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த பேருந்தில் தனக்கு அருகே அமர்ந்திருந்த 25 வயது யுவதியை பாலியல் ரீதியாக தொந்தரவுக்கு உள்ளாக்கியுள்ளார்.

இது தொடர்பாக, யுவதி பேருந்தின் நடத்துநருக்கு தெரிவித்ததையடுத்து களுத்துறை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர். (ஐ)

# பால் உற்பத்தியை அதிகரிக்க உதவ முன்வந்தது நியூசிலாந்து

கொழும்பு, ஓக. 01

இலங்கையில் பால் உற்பத்திக் கைத்தொழிலை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு நியூசிலாந்து முன்வந்துள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் டேவிட் பைன் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், உற்பத்தியை அதிகரிப்பதற்கான உயர்தர பசுக்களின் தட்டுப்பாடு மற்றும் மாடுகளின் விந்தணுக்களை இறக்குமதி செய்ய வேண்டிய தன் அவசியம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் விளையும் அன்னாசி மற்றும் மாம்பழங்களை நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஆதரவு வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். (ஐ)

# விமலுக்கு எதிரான வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஓக. 01

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட இருவருக்கு எதிரான வழக்கை சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கோட்டை நீதிவான் தனுஜா லக்மாலி நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட 40 அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தி,அரசாங்கத்துக்கு 90 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுத்தினார் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட இருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட இருவரும் திறந்த மன்றில் முன்னிலையாகியிருந்தனர். (ஐ)

# எரிவாயு விலை குறைக்கப்படாது

கொழும்பு, ஓக. 01

சமையல் எரிவாயு விலையில் ஓகஸ்ட் மாதத்தில் எதுவித மாற்றமும் மேற்கொள்ளப்படாது என்று லிற்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 02 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லிற்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 28 கடேற் அதிகாரிகள் விமான படையில் இணைக்கப்பட்டனர்!

கொழும்பு, ஓக. 01

புதிய கடேற் அதிகாரிகள் விமானப் படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவால் இந்தப் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 28 அதிகாரிகள் நேற்றைய தினம் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் விமானப் படை பதவிநிலை பிரதானி. பிரதி பதவிநிலை பிரதானி மற்றும் பணிப்பாளர்கள், தியத்தலாவை விமானப் படை தளத்தின் கட்டளை அதிகாரி, மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# நாட்டின் பணவீக்கம் 2.4 வீதம் அதிகரித்தது!

கொழும்பு, ஓக. 01

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதத்தில் 1.7 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் இந்த மாதத்தில் 2.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உணவு பணவீக்கம், கடந்த ஜூன் மாதத்தில் 1.4 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில், ஜூலை மாதத்தில் 1.5 சதவீமாக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதேநேரம், கடந்த ஜூன் மாதத்தில் 1.8 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம், ஜூலை மாதத்தில் 2.8 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# 1916 அவசர தொலைபேசி அறிமுகம்!

கொழும்பு, ஓக. 01

தென்னை பயிர்ச்செய்கையில் ஏற்படும் பிரச்னைகளை நேரடியாக தெரிவிக்க 1916 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று தென்னை பயிர்ச்செய்கை சபை தெரிவித்துள்ளது.

வெள்ளை ஈ நோய் உள்ளிட்ட தென்னை செய்கை தொடர்பான பிரச்னைகளுக்கு இந்த தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த அவசர தொலைபேசி இலக்கம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விஜயதாஸவும் பஸிலும் சந்தித்து உரையாடினர்!

கொழும்பு, ஓக. 01

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தே இந்த கலந்துரையாடல் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைவது தொடர்பில் தனது விருப்பத்தை தெரிவித்தார்

எனினும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன அதற்கு எதுவித பதிலும் வழங்கவில்லை என்றும் கூறப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் கூடும் இடங்களில் டெங்கு பரவும் அபாயம் அதிகம்!

கொழும்பு, ஓக. 01

**பொதுமக்கள் கூடும் இடங்களில் டெங்கு நோய் பரவக் கூடிய சந்தர்ப்பம் அதிகம் உள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமர வீர தெரிவித்துள்ளார்.**

அரச உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிட்ட கருத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரின் பதிவில், "அரச கட்டடங்கள், பாடசாலைகள், மேலதிக வகுப்புகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் பல்வேறு இடங்களில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக கண்டி, காலி, இரத்தினபுரி மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களின் சுற்றுப்புற சூழலை மிகவும் சுத்தமாக வைத்திருக்குமாறும் - குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வர்த்தகர்கள் மூவரிடம் சுமார் ரூ. 4 கோடி மோசடி!

## சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஓக. 01

வர்த்தகர்கள் மூவரிடம் 3 கோடியே 94 இலட்சம் ரூபாயை மோசடி செய்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் பங்குதாரர்கள் என்ற போர்வையில் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது. பதுளையை சேர்ந்த வர்த்தகர்களே இவ்வாறு ஏமாற்றப்பட்டனர்.

முதலிடும் பணத்துக்கு பங்கும் வட்டியும் தருவதாகக் கூறியே குறித்த வர்த்தகர்கள் ஏமாற்றப்பட்டனர் என்று தெரிய வந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் பதுளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரணிலுக்கு ஆதரவு அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பொருளாதாரம் நமது முதன்மையான முன்னுரிமை. 2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் செய்தது போல் பொருளாதாரம் தோல்வியடைந்தால் அனைத்தும் எவ்வாறு சரிந்துவிடும் என்பதை நாங்கள் பார்த்தோம். ஜனாதிபதி அதை மீட்பதிலும் நிலைப்படுத்துவதிலும் சிறப்பான பணியை செய்துள்ளார்.

தற்போதைய திட்டம் செயல்படும் போது நாம் புதிய விடயங்களை முயற்சி செய்ய முடியாது. நமது வெற்றிகரமான கொள்கைகளை கடைப்பிடிப்பது நமது நாட்டின் எதிர்காலத்துக்கு இன்றியமையாதது.

எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையாக ஆதரவளிக்கிறேன் என அவர் குறித்த பதிவில் தெரிவித்துள்ளார். (ஐ)

# நிறைவேற்று அதிகாரமே பெரிதென காட்ட ஜனாதிபதி முயல்கின்றார்!

## நல்லாட்சி ஆதரவு அமைப்பு சாடல்

கொழும்பு, ஜூலை 31

நிறைவேற்று அதிகாரம் நீதித்துறையைவிட பெரியது என்று காண்பிப்பதற்கு ஜனாதிபதி முயல்கின்றார் என்று - 2015 இல் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளித்த புரவெசி பலய என்ற அரசியல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் விவகாரத்தை கையாண்ட விதத்தில் ஜனாதிபதி நாட்டில் ஒரு விவகாரத்தை உருவாக்கியுள்ளார். நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்குமான மோதல் குறித்த ஜனாதிபதியின் சமீபத்தைய கருத்து தேர்தல் பிற்போடப்படலாம் என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது. நிறைவேற்று அதிகாரம் தொடர்ச்சியாக நீதித்துறையுடன் மோதலில் ஈடுபட்டுள்ளது. முன்னைய எந்த ஜனாதிபதியையும் விட தற்போதைய ஜனாதிபதியே நீதித்துறையுடன் அதிக மோதல்களில் ஈடுபட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் நீதித்துறையைவிட பெரியது என்று காண்பிப்பதற்கு ஜனாதிபதி முயல்கின்றார். நீதித்துறை தனக்கு கட்டுப்படவேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார் எனவும் புரவெசி பலய அமைப்பின் தலைவர் காமினி வியங்கொட தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக தேர்தல்கள் குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, ஓக. 01

சுயேச்சை வேட்பாளர் என்று அறிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதி மற்றும் சொத்துகளை தவறான வகையில் பயன்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்கிறார். இதனால், ஏனைய வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே, இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய சுதந்திர முன்னணி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அளித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ள ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தல்கள் சட்டம் மீறப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ஊடக பிரிவால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன உட்பட ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து ஜனாதிபதித் தேர்தலில் தனக்கான ஆதரவு குறித்து பேசியுள்ளார்.

இந்த பேச்சின் ஒளிப்படங்கள், காணொலிகள் மற்றும் உத்தியோகபூர்வ ஊடக அறிக்கைகளை ஜனாதிபதி ஊடக பிரிவு முழுமையாக பிரசாரம் செய்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் வரிப்பணத்தால் பராமரிக்கப்படும் ஜனாதிபதி செயலகம் மற்றும் அதன் வளங்கள், மக்களின் வரிப்பணம் ஊடாக சம்பளம் பெறும் பணிக்குழுவினர் உட்பட ஜனாதிபதி ஊடக பிரிவை பயன்படுத்தி தனது ஜனாதிபதி தேர்தல் கருத்திட்டத் திட்டத்துக்கான பேச்சுகளை முன்னெடுத்து தேர்தல் விதி மீறலாகும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# 6 உள்ளூர் துப்பாக்கிகளுடன் இரத்தினபுரியில் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 01

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 6 துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இரத்தினபுரி - எல்பாத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில், அதே இடத்தை சேர்ந்த 65 வயது நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 6 துப்பாக்கிகள் மற்றும் 485 கிராம் வெடிமருந்து என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விபத்தில் பெண் மரணம் யாழ்ப்பாண சாரதி கைது

கொழும்பு, ஓக. 01

மோட்டார் சைக்கிளை பேருந்து மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பில் இருந்து வவுனியா வந்து கொண்டிருந்த பேருந்தே இவ்வாறு விபத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, பேருந்தை செலுத்திய யாழ்ப்பாணத்தை சேர்ந்த சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அநுராதபுரம் - நொச்சியாகமவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கணவனும் மனைவியும் விபத்தில் சிக்கினர். இதில், மனைவி தலை துண்டிக்கப்பட்டு உயிரிழந்தார்.

34 வயது பெண்ணே உயிரிழந்தார். பெண்ணின் கணவர் சிறுகாயங்களுடன் தப்பினார்.

நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பதுளையில் கடும் வறட்சி 164 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, ஓக. 01

நிலவும் வறட்சியான காலநிலையால் பதுளை - இலுக்தன்ன பகுதியில் 164 குடும்பங்கள் கடுமையான குடிதண்ணீர் பிரச்னையை எதிர்கொள்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

குடிதண்ணீர் பிரச்னையால் 164 குடும்பங்களை சேர்ந்த 656 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பௌசர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இ-சிகரெட்களுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஓக. 01

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இலத்திரனியல் சிகரெட்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் நீர்கொழும்பு கொச்சிக்கடை பிரதேசத்தை சேர்ந்த 20 வயது இளைஞராவார்.

அவரின் பயண பொதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 245 இலத்திரனியல் சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான நபர் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 01

ஜனாதிபதிக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நன்றி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி விடுத்தமைக்கே தேர்தல்கள் ஆணைக்குழு நன்றி தெரிவித்துள்ளது. (ஐ)

# ஓட்டோ விபத்தில் சிறுவன் மரணம்!

கொழும்பு, ஓக. 01

முச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்ற 17 வயது சிறுவன் விபத்தில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் காலி வீதியில் களுத்துறை - பாணாந்துறை -கொரலவெல்ல பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

முச்சக்கர வண்டியை செலுத்திய சிறுவன் கட்டுப்பாட்டை இழந்து வீட்டின் மதிலுடன் மோதியதியே இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் படுகாயமடைந்த சிறுவன் பாணாந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அங்கு அவர் மரணமானார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# “பிள்ளையை தேடும் தாய்க்கு பயங்கரவாதி முத்திரையா?”

கல்லடி, ஓக. 01

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராடிவரும் தாய்மார்கள்மீது பயங்கரவாத முத்திரை குத்தி அவர்களின் போராட்டத்தை மலினப்படுத்தும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவி அ. அமலநாயகி கவலை வெளியிட்டுள்ளார்.**



மட்டக்களப்பு, கல்லடியில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு திங்கட்கிழமை அமலநாயகி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் மட்டு. ஊடக அமையத்தில் நடத்திய ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊடகச் சந்திப்புகளை நடத்தியமை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிரான போராட்டம், மயிலத்தமடு - மாதவனை பண்ணையாளர் போராட்டத்தில் கலந்து கொண்டமை, பல்கலைக்கழகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிகழ்வில் கலந்து கொண்டமை, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தமை, சர்வதேச பெண்கள் அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணுகின்றமை, புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணுகின்றமை, புலிகளை மீளுருவாக்குதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

இந்த விசாரணையின் போது, “குற்றம் சுமத்தப்பட்டவர்களை விசாரிக்காது, பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக, பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாக்கும் முனைப்புடன் அரச புலனாய்வு கட்டமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

எமது போராட்டத்தை எங்களை அச்சுறுத்துவதன் ஊடாக முடிவுக்கு கொண்டுவரலாம் என்று நினைக்கின்றனர்.

எங்களுக்கு நீதி கிடைக்கும் வரையில் எமது உயிர் போனாலும் எமது போராட்டம் தொடரும்- என்றார். (எ)



# ஒலிம்பியாட் போட்டியில் வென்ற பாடசாலை மாணவி கௌரவிப்பு

அக்கரைப்பற்று, ஓக. 01

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என கல்லூரியின் அதிபர் ஏ. எச். பௌஸ் தெரிவித்தார்.

இந்த மாணவியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது விஞ்ஞானப் பாட இணைப்பாளர் ஏ. எல். நவாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட ஒலிம்பியாட் போட்டியில் பங்கு பற்றிய இந்தப் பாடசாலையின் இரு மொழி கற்கைப் பிரிவில் தரம் 09 இல் கலவி கற்று வரும் எம். ஐ. பாத்திமா இப்பத் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# எதிர்க்கட்சி எம். பி. என்றுகூறி துரோகம் செய்ய முடியாது!

## சொல்கிறார் ஹரீஸ் எம். பி.


சம்மாந்துறை, ஓக. 01

நாங்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றோம் என்ற எண்ணத்துடன், சாக்குப் போக்குடன் காலத்தை கழிப்பது மக்களுக்குச் செய்யும் துரோகம் என்றுதான் நான் சொல்வேன்- இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். முகம்மட் ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த நான்கு வருடங்களாக பல தேவைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. எனவே பிரதேச வாதம், இனவாதம் பாராமல் நான் சேவைகளை செய்து வருகின்றேன் என்றும் அவர் கூறினார்.

சம்மாந்துறையில் அபிவிருத்திப் பணிகளை தொடங்கி வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

துரதிஷ்டவசமாக இந்த நாட்டில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கம் பாராளுமன்றத்தில் உள்ள எந்த அமைச்சருக்கோ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ நாட்டின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. ஆனால், இப்போது ரணில் விக்கிரமசிங்க, இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சில நிதி ஒதுக்கீடுகளை செய்ய முற்பட்டபோது. துரதிஷ்டவசமாக எதிர்க்கட்சியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படாமல் இரத்து செய்யப்பட்டிருந்தது. ஏனென்றால் நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள். நாங்கள் சிறீ



லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்றோம்.

இருந்தபோதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பற்றி உங்களுக்குத் தெரியும். இனவாத ரீதியாக சிந்திக்கின்ற ஒரு கடும்போக்கு வாதி அல்லர். மக்களின் பிரச்னையை கேட்டறிகின்ற ஒரு ஜனாதிபதியாக இருந்தபடியால் நான் தைரியமாக சென்று நமது மாவட்டத்தின் அவல நிலை, பிரச்னைகளை எடுத்துக் கூறினேன். நீண்ட காலமாக நாங்கள் யுத்தத்துக்கு முகம் கொடுத்தது மட்டுமில்லாமல் அரசின் அபிவிருத்தித் திட்டத்தில் முழுமையாக உள்வாங்கப்படாத மாவட்டம் என்பதை சுட்டிக்காட்டியதால் எங்களுக்கு மெது மெதுவாக நிதிகளை ஒதுக்கீடு செய்ய ஆரம்பித்தார். அதனால்தான் நான் அம்பாறை மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதி என்ற ஒரு கடமையில் இந்த அபிவிருத்தித் திட்டத்தை உங்களுக்காக கொண்டு வந்திருக்கின்றேன்- என்றார். (எ)

# படகு தரிப்புத்துறை பணிகளை ஆரம்பிக்க ஜனாதிபதி பணிப்பு

சாய்ந்தமருது, ஓக. 01

அம்பாறை மாவட்ட மீனவர்களின் நீண்ட காலத்தேவையாக இருந்து வருகின்ற படகுத் தரிப்புத் துறையை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான இணை அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ. எம். ஜெமீல், ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதற்கான எழுத்து மூல கோரிக்கை மற்றும் திட்ட வரைபை கலாநிதி ஜெமீல், ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இயந்திரப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு இந்தப் பகுதியில் தரிப்பிடம் ஒன்று இல்லாதிருப்பதால் படகுகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை படகுத் துறைமுகத்திலேயே நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது. இதனால் படகு உரிமையாளர்களும் மீனவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டே சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர் ஹூம் அஷ்ரப், அமைச்சராக பதவி வகித்த காலப்பகுதியில் சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத் துறையொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

எனினும் ஒலுவில் பகுதியில் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதால் சாய்ந்தமருதில் படகுத்துறை அமைக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.

ஆனால், ஒலுவில் பகுதியில் அமைக்கப்பட்ட துறைமுகம் பயன்பாட்டுக்கு உகந்ததாக அமையாத காரணத்தால் அங்கும் படகுகளை தரித்து வைக்க முடியவில்லை.

இந்த நிலையில் பல தசாப்த காலமாக ஆழ்கடல் மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பெரும் சவாலான பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் ஜெமீல், இந்த விடயத்தை ஜனாதிபதியின் நேரடி கவனத்துக்கு கொண்டு சென்று, அதற்கான முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

இதன் பிரகாரம் சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத்துறையை அமைப்பதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதாக உறுதியளித்துள்ள ஜனாதிபதி, சாய்ந்தமருது முகத்துவாரம் அமைந்துள்ள பாலத்தை போதியளவு உயர்த்தி நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


அவ்வாறே முகத்துவார தோணாப் பகுதியை போதியளவு ஆழமாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கரையோரம் பேணல் திணைக்களத்துக்கு ஜனாதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

# காத்தான்குடி மீரா பாளிகா அணி தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு

காத்தான்குடி, ஓக. 01

மாகாண மட்ட சதுரங்க போட்டியில் பங்கு பற்றிய மட்டக்களப்பு, காத்தான்குடி மீரா பாளிகா தேசிய பாடசாலை மாணவிகள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27, 28, 29 ஆகிய தினங்களில் திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற கிழக்கு மாகாண சதுரங்க போட்டியில் பங்கேற்ற



குறித்த பாடசாலை அணி 20 வயது மகளிர் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளா நிலச்சரிவில் 170 பேர் பலியாகினர்



வயநாடு, ஓக. 01

**இந்தியாவின் கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 170 ஆக அதிகரித்தது. நூற்றுக்கும் மேற்பட்டோரை காணவில்லை என்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.**

இரண்டாம் நாளாக நேற்றுப் புதன்கிழமை தொடர்ந்த மீட்புப் பணியில் மாயமானோரை தேடுதல், உயிருடன் சிக்கியுள்ளோரை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இந்த நிலையில், வயநாட்டில் மீண்டும் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கேரள வரலாற்றில் மிக மோசமான நிலச்சரிவு இது என்பதால் நேற்றும் நேற்று முன்தினமும் துக்க தினமாக கேரள அரசு அனுஷ்டித்தது. திருவனந்தபுரத்தில் உள்ள சட்டப்பேரவையில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. 11 மாவட்டங்களில் நேற்று கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி இதுவரை 170 பேர் உயிரிழந்தனர். 190 பேர் மீட்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோரின் நிலை என்ன என்று இதுவரை தெரியவில்லை.

இதேவேளை கேரள அமைச்சர் ராஜன் கூறுகையில், நிலச்சரிவில் சிக்கிய 200இற்கும் மேற்பட்டோரை காணவில்லை. நிலச்சரிவு ஏற்பட்ட கோப்பி தோட்டங்களில் மேற்குவங்கம், அசாமைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணி புரிந்துவந்துள்ளனர். அவர்களின் நிலை என்னவென்று தெரியவில்லை- என்றார்.

அத்தோடு, இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கன்னூர், காசர்கோடு ஆகிய 8 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, மீண்டும் நிலச்சரிவு அபாயம் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

(எ)

# வெள்ளத்தில் சிக்கி சீனாவில் 7 பேர் பலி

பீஜிங், ஓக. 01

சீனாவில் கனமழை, வெள்ளத்தில் சிக்கி 7 பேர் பலியாகினர்.


ஹூனான் மாகாணத்தில் கனமழையால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் 900 வீடுகளும், 1, 345 வீதிகளும் பாதிப்படைந்துள்ளன. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ 5, 400 மீட்புக் குழுவினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 7 பேர் பலியாகினர்.

சீனாவின் பல்வேறு பகுதிகளில் வெப்ப அலை வீசி வந்த போதும், சில பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர்.

(எ)



# "மத்திய கிழக்கு முழுமையான யுத்தத்தை நோக்கி நகர்கிறது"

ஜெருசலேம், ஓக. 01

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டமை மத்திய கிழக்கை முழுமையான ஒரு யுத்தத்தை நோக்கி நகர்த்தியுள்ளது என ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் மத்திய கிழக்கு விவகாரங்களுக்கான பேராசிரியர் நடெர் ஹசேமி தெரிவித்தார்.

இது பெரும் திருப்புமுனை. பெய்ரூட்டின் தெற்கு பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரை சில மணி நேரத்துக்கு முன்னர் இஸ்ரேல் படுகொலை செய்ய முயன்றுள்ளதால் ஹமாஸ் தலைவரின் படுகொலை லெபானிலும் எதிரொலிக்கும் என அவர் கூறினார்.

இஸ்மாயில் ஹனியேயின் படுகொலைக்கு பின்னர் இந்த மோதலை தீவிரப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈரான் ஈடுபடலாம் என பேராசிரியர் நடெர் ஹசேமி தெரிவித்தார்.

(எ)

# ஈரானில் இஸ்ரேல் தாக்குதல் ஹமாஸ் தலைவர் உயிரிழப்பு



காஸா, ஓக. 01

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் தங்கள் அமைப்பின் முக்கிய தலைவர் இஸ்மாயில் ஹனியே உயிரிழந்தார் என்று ஹமாஸ் போராளிகள் குழு அறிவித்துள்ளது. ஈரானின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கச் சென்றபோது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹனியே பலியானார்.

இது தொடர்பில் ஹமாஸ் வெளியிட்ட அறிக்கையில், எமது தலைவர், போராளி இஸ்மாயில் ஹனியே ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார் எனத் தெரிவித்துள்ளது. ஈரானின் புரட்சிகர படைகளும் இந்தச் சம்பவத்தை உறுதி செய்துள்ளன. ஹனியே தங்கியிருந்த இடத்தை குறி வைத்து இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் அவரும், அவரது மெய்க்காப்பாளரும் கொல்லப்பட்டனர் என்று ஈரானிய புரட்சிப் படைகள் தெரிவித்துள்ளன.

இஸ்மாயில் ஹனியே கடந்த 1987 ஆம் ஆண்டு ஹமாஸ் படையில் இணைந்தார். இஸ்ரேலுக்கு எதிரான முதல் புரட்சியில் அவர் பங்கேற்றார். 1993 வரை நடந்த அந்த மோதலில் அவர் முக்கிய பங்காற்றினார் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# லெபனான்மீது றொக்கெட் வீசி ஆளில்லா விமானம் தாக்குதல்

## இஸ்ரேலுக்கு ஈரான் கண்டனம்

பெய்ரூட், ஓக. 01

லெபனான் மீது இஸ்ரேலின் ஆளில்லா விமானம் 3 ரொக்கெட்களை வீசி தாக்கியதில் பெண் ஒருவர் பலியானார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்டோபரில் கொடூரத் தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேல் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பணயக் கைதிகளாக பலர் சிறைபிடித்து செல்லப்பட்டனர்.

அந்த நாளில் இருந்து, இரு தரப்பினருக்கும் இடையேயான மோதல் முற்றியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டவர்களில் ஒரு சிலரை இஸ்ரேல் மீட்டது.

எனினும், காஸாவை இலக்காகக் கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் பலியாகினர்.

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள கோலன் ஹைட்ஸ் பகுதியில் உதைபந்தாட்ட திடல் ஒன்றில் திடீரென சில நாட்களுக்கு முன் ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில், குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இதற்கு முன்னர் லெபனான் மீது தெற்கு பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா குழுவைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா குழுவினரின் தாக்குதலுக்குப் பதிலடியாக, இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர், லெபனானின் தலைநகர் பெய்ரூட்டின் தெற்குப் பகுதியை இலக்காக கொண்டு கடுமையாக தாக்கினர்.

இஸ்ரேல் மக்கள் படுகொலைக்கு பொறுப்பான ஹிஸ்புல்லா அமைப்பை குறி வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் 3 ரொக்கெட்கள் வீசப்பட்டன. இஸ்ரேல் நடத்திய இந்தத் தாக்குதலுக்கு லெபனானில் உள்ள ஈரான் தூதரகம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

(எ)

# ரஷ்யாவை எதிரி நாடாக காட்ட அமெரிக்க உளவுப் பிரிவு சதி!

மொஸ்கோ, ஓக. 01

ரஷ்யாவை எதிரி நாடாக காட்ட, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தலையீடு என அந்த நாட்டு உளவுப் பிரிவு அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்று ரஷ்யாவின் கிரெம்ளின் அரண்மனையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்க உளவுப் பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ரஷ்யாவை அடிப்படையாக கொண்டு செயல்படும் நிறுவனங்களை அந்த நாடு பயன்படுத்தியுள்ளது. அமெரிக்க மக்களின் கருத்துகளை வடிவமைக்கும் நோக்கில் ரஷ்யா செயல்படுகிறது என அமெரிக்க உளவுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

"இது முற்றிலும் அபத்தம். கேட்பதற்கே நகைச்சுவையாக உள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுக்கிறோம்.

ரஷ்யாவை ஓர் எதிரியாக காட்ட, அமெரிக்க உளவுப் பிரிவு அதிகாரிகள் முயற்சித்துள்ளனர். அமெரிக்க தேர்தல் நெருங்கி வரும் வேளையில் இதுபோன்று நிறைய அறிக்கைகள் வெளிவரும்.

குடியரசு மற்றும் ஜனநாயக கட்சியினர் என இரு வரும், அரசியல் போராட்டத் தில், அதுவும் தேர்தல் பிரசாரத் தின்போது, சுயநலத்துக்காக தனிப்பட்ட முறையில் பயன்ப டுத்தி கொள்ளக்கூடிய முக்கிய காரணிகளாக ரஷ்யாவும், அதன் தலைமையும் உள்ளனர்" என்று பெஸ்கோவ் கூறியுள்ளார்.

(எ)

# காஸாவில் குழந்தைகளுக்கு போலியோ ஏற்படும் அபாயம்

காஸா, ஓக. 01

காஸாவில் உள்ள குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரில் குழந்தைகள், பெண்கள் உட்பட 39 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்தப் போரால் உணவு, தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து காஸா மக்கள் தவித்து வருகின்றனர். இந்த நிலையில், காஸாவில் குழந்தைகள் போலியாவால் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, காஸாவில் கழிவு நீர் மாதிரிகளில் தொற்று நோய்க் கிருமிகள் இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது. உலக சுகாதார நிறுவனம் காஸாவுக்கு ஒரு மில்லியன் போலியோ தடுப்பூசிகளை அனுப்புகிறது. தடுப்பூசிகள் குழந்தைகளை சென்றடைவதை உறுதி செய்ய போர் நிறுத்தம் தேவை- என்றார். காஸாவின் சுகாதாரத்துறை அமைச்சகம் கூறும்போது, போலியோ நோய் ஏற்படுவதை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் தினேஷ் தலைமையில் ரணிலுக்கான புதிய கூட்டணி!

**ஆளும் கட்சி கூட்டத்தில் தீர்மானம்**

கொழும்பு, ஓக. 01

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவருக்கு ஆதர வளிக்கும் சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் மிகப்பெரிய அரசியல் கூட்டணியை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.**



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆளும் கட்சியின் கூட்டத்தில் கூட்டணி அமைப்பதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது கூட்டணி பிரதமரின் தலைமையின் கீழ் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி முன்வைத்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது ஜனாதிபதியை ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக முன்னிறுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர் என்றும் தெரிய வந்தது. (ஐ)

# போரில் அங்கவீனமடைந்த சகல படையினருக்கும் நீதி கிட்டியது!

**கமால் குணரட்ன தெரிவிப்பு**

கொழும்பு, ஓக. 01

போரின் போது அங்கவீனமடைந்த அனைத்து இராணுவத்தினருக்கும் நீதி கிடைத்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.



நாட்டில் போரில் காயமடைந்த 60 ஆயிரம் படையினரில் சுமார் 10 ஆயிரம் படையினர் படுக்கையில் அல்லது சக்கர நாற்காலிகளில் உள்ளனர். படுக்கையில் அல்லது சக்கரநாற்காலியில் இருப்பவர்களுக்கு மருத்துவ மறுவாழ்வு வழங்கவும் வாழ்நாள் முழுவதும் சிகிச்சை அளிக்கும் வகையிலும் 4 இடங்களில் சிகிச்சை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டுக்காக போராடி மருத்துவ காரணங்களால் ஓய்வு பெற்றிருக்கும்போது - 55 வயது நிறைவடையும் முன் உயிரிழந்த இராணுவத்தினரின் தங்கி வாழ்வோருக்கு அவர்கள் உயிருடன் இருந்தபோது பெற்று வந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிலையான மாதாந்திர கொடுப்பனவாக வழங்கப்படும். இதன்படி போரின் போது அங்கவீனமடைந்த அனைத்து இராணுவத்தினருக்கும் நீதி கிடைத்துள்ளது என்பதையும் கூற வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# கொழும்பு இரட்டை கொலை; சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு, ஓக. 01

கொழும்பு - கிராண்ட்பாஸில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிசூடு நடத்தியவர், கொலை சந்தேகநபரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்தவர். கொலைக்கு உதவியவர் என்று மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள், ஒருகொடவத்தை, வெல்லம்பிட்டியை சேர்ந்த 26, 37, 45 வயது நபர்களாவர்.

கடந்த 25ஆம் திகதி வியாழக்கிழமை கிராண்ட்பாஸில் அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக முச்சக்கரவண்டியில் சென்ற ஆணும் பெண்ணுமாக இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொழும்பில் வாகனங்கள் நிறுத்த புதிய முறைமை அறிமுகமாகும்!

கொழும்பு, ஓக. 01

கொழும்பு மாநகர எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தும் முறைமையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

வீதிகளில் வாகன தரிப்பிடத்தை நிர்வகிப்பதற்கு ஒப்பந்ததாரர், நிர்வாகியை நியமிக்கும் தற்போதைய முறைக்கு பதிலாக ஒரு வலயத்துக்கு ஓர் ஒப்பந்ததாரர் நியமிக்கப்படவுள்ளார் என்று போக்குவரத்து திணைக்கள பிரதி பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, சுமார் 3 மாதங்களில் இந்த முறையை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் நடக்கின்றன. அத்துடன், இப்பகுதியில் போக்குவரத்து நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டால், அந்தந்த பகுதியில் ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு அல்லது மூன்று இடங்களில் வாகனங்களை நிறுத்தும் வசதியை ஓட்டுநர்கள் பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்காலத்தில் வாகன நிறுத்துமிடங்களுக்கு பல்வேறு தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

# பந்துலவின் கடன் அட்டையை பயன்படுத்தி மோசடி செயல்!

**விசாரணைகள் ஆரம்பம்**

கொழும்பு, ஓக. 01

அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கடன் அட்டையை பயன்படுத்தி பொருட்களை கொள்வனவு செய்த நபர்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் அமைச்சரின் கடன் அட்டையை பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் பந்துல முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு நீதிமன்றம், குற்ற விசாரணை பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளது.

அமைச்சருக்கு சொந்தமான கடன் அட்டையை பயன்படுத்தி மோசடியான முறையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன எனறு தெரிவிக்கப்பட்டது.

5 இலட்சம் ரூபாய் கடன் உச்சவரம்பை கொண்ட இலங்கை வங்கிக் கடன் அட்டை ஒன்றைப் பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# போதைப்பொருள் குற்றம் 742 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 01

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணித்தியாலத்தில் நடத்தப்பட்ட யுக்திய நடவடிக்கையில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 742 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 728 ஆண்களும் 14 பெண்களும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் 14 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 7 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 185 கிராம் 224 மில்லி கிராம் ஹெரோயின், 278 கிராம் 456 மில்லி கிராம் ஐஸ், 1,407 கிராம் 575 மில்லி கிராம் கஞ்சா, 182 போதை மாத்திரைகள் மற்றும் 27 ஆயிரத்து 51 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தொற்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அஸ்வெசும இரண்டாம் கட்டம் மக்கள் தொகை கணிப்பு நிறைவு

கொழும்பு, ஓக. 01

அஸ்வெசும இரண்டாம் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட கணக்கெடுப்புக்காக 4 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இதில், 4 இலட்சம் பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நலன்புரி கொடுப்பனவு நன்மைகளை பெறவுள்ளவர்கள் தொடர்பான தரவுகள் திரட்டப்படுகின்றன. அரசியல்வாதிகளின் தலையீடு இன்றி அதிகாரிகளினால் இந்த கணக்கெடுப்பு நடைபெறுவதால், தேர்தல் காலத்திலும் இதனைத் தொடர அனுமதி வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உடல்பருமன் பாதிப்பு நாட்டில் அதிகரிக்கிறது

கொழும்பு, ஓக. 01

நாட்டின் மக்களிடையே உடல் பருமன் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மகிபால தெரிவித்துள்ளார்.

மருத்துவ முகாம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டில் சுமார் 48 சதவீத பெண்கள் அதிக எடையுடன் இருக்கின்றனர். குறைந்தது 33.3 சதவீத ஆண்கள் தங்கள் ஆரோக்கியமான எடையை விட அதிக எடையுடன் இருக்கின்றனர்.

உடற்பயிற்சியின்மை, ஆரோக்கியமான உணவுகளில் கவனம் செலுத்தாமையே உடல் பருமனுக்குக் காரணம். சீனி, கொழுப்பு, உப்பு அதிகமாக உட்கொள்ளும்போது உடற்பயிற்சி செய்யும் அளவில் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை அத்தியாவசிய காய்கறிகள், பழங்கள் உட்கொள்ளல் குறைந்துள்ளது. சமுதாயத்தில் பெரும்பாலான மக்கள் தங்கள் நோய்களைப் பற்றி அறிந்திருக்கமாட்டார்கள். அதிக எண்ணிக்கையிலான மக்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். முதியவர்களில் 42 வீதத்தினர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டுப்பணம்...

பண்டார மற்றும் குழுவினர் சஜித் பிரேமதாஸவுக்கான கட்டுப்பணத்தை செலுத்தினர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடு வதற்கு இதுவரை 6 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. வேட்பாளர்கள் எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் வரை கட்டுப்பணத்தை செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஆயிரம்...

வெளிப்பட்டதாக மருத்துவர்களின் தொழில்சங்க கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்ஜீவ தெரிவித்துள் ளார்.

இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான தெளிவின் மையே சட்டவிரோத கருக்கலைப்புகள் அதிகரிப்புக்குக் காரணம் - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

### சிறீலங்கா...

செயல் குழுவினர் தமது ஆதரவை தெரிவித்தனர்.

இதேநேரம், சிறீ லங்கா சுதந்திர கட்சி யின் அரசியல் பீடமும் மத்திய குழுவும் நேற்று மாலை கூடின. இதிலேயே ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டது என்றும் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (ஐ)

### காணி...

பேசப் போவதில்லை. இதனால், வடக்கின் சில அரசியல் கட்சிகளால் எம்முடன் இணைந்து செயல்பட முடியவில்லை. வடக்கின் ஒரு பகுதி இளைஞர்கள் காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்ற கோரிக் கையை கைவிட்டுள்ளனர். தமிழ், முஸ் லிம் இளைஞர்கள் தற்போது எம்முடன் இணைந்துள்ளார்கள்.

எதிர்வரும் தேர்தல்களில் வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் சிறீ லங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை உருவாக்குவதே எனது இலக்கு. அவ்வாறு தெரிவாகும் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சரவை யிலும் அங்கம் வகிக்கலாம். ஒரு காலத் தில் அவர் பிரதமராகவோ - ஜனாதி பதியாகவோகூட பதவி வகிக்கலாம் என்றும் தென்னிலங்கை ஊடகம் ஒன் றுக்கு வழங்கிய நேர்காணலில் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ஐ)

### கட்சியின்...

முடிவு எடுக்கப்பட்டதாகவும் அந்தக் கட்சி தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதில்லை என்றும் கட்சி சார்பில் வேட்பாளரை நிறுத்துவது என வும் கடந்த திங்கட்கிழமை தீர்மானித்து பொதுஜன பெரமுன கட்சி அறிவித்தது.

இந்தத் தீர்மானத்தை மீறி 92 பாராளு மன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்க உறுதியளித்துள்ளனர். இதனி டையே, பெரமுன கட்சியின் மாவட்ட கிளைகள் சிலவும் ரணிலுக்கு தமது ஆத ரவைத் தெரிவித்தன.

இதைத் தொடர்ந்தே, கட்சி தீர்மா னத்தை மீறும் உறுப்பினர்கள் அவர்க ளின் பதவிகளில் இருந்து நீக்கப்படுவர் என்றும் அவர்களுக்கு பதிலாக புதியவர் கள் விரைவில் நியமிக்கப்படுவர் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இதேநேரம், கம்பஹா மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து பிரசன்ன ரணதுங்க, காலி மாவட்ட அமைப்பா ளர் பதவியிலிருந்து ரமேஷ் பத்திரண, மாத்தறை மாவட்ட அமைப்பாளர் காஞ் சன விஜயசேகர ஆகியோரை நீக்குவ தற்கு ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### ஹமாஸ்...

தாக்குதலில் அவரும் அவரின் மெய்ப் பாதுகாவலரும் கொல்லப் பட்டனர் என்று ஹமாஸ் இயக்கம் உறுதிப்படுத்தி யுள்ளது.

லெபனானின் தலைநகர் பெய்ரூட் டில் ஈரானிய ஆதரவு பெற்ற ஹிஸ் புல்லா இயக்கத்தின் தலைவர்கள் தங்கி யிருந்தனர் எனக் கூறப்படுகின்ற ஏழு மாடி கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரே லின் தாக்குதல் நடந்த சில மணி நேரத் துக்குப் பின்னர் தெஹ்ரானில் ஹமாஸ் தலைவர் மீதான இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தளபதி ஒருவர் கொல்லப்பட்டார் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்மாயில் ஹானியே கொல்லப்பட்ட சம்பவத் துக்கு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ ஆகியோர் கண்டனம் தெரிவித் துள்ளனர். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 9இல்)

### இந்த...

அதிகமானவர்கள் பல்கலைக்கழகங் களுக்கு உள்வாங்கப்படுவர்.

வெட்டுப்புள்ளி தயாரிக்கும் பணியை விரைவுபடுத்த பல பல்கலைக் கழகங்க ளில் இருந்து அதிகாரிகள் நியமிக்கப்பட் டுள்ளனர். இந்த மாத இறுதிக்குள் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்தது. (ஐ)

### ரி-56...

பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அதிரடிப் படை சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் ஆலோ சனைக்கு அமைய இந்தக் கைது இடம் பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியள வில் மௌலவியின் இல்லத்தை விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்தனர். இதையடுத்து, நடத்தப்பட்ட சோதனை யில் அந்த வீட்டிலிருந்து 2 ரி - 56 ரக துப்பாக்கிகள், 59 ரவைகள், 2 மெகசீன் கள், ஒரு பைனகுலர், ஒரு வாள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து மௌலவி கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட வரை கொழும்பு பயங்கரவாதத் தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (ஐ)

### கழுத்து...

நேற்றுமுன்தினம் அதிகாலை வவுனிக்குளத்தில் அவரின் மோட்டார் சைக்கிளும் உடலும் கண்டுபிடிக்கப்பட் டன. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சடலம் கிடந்த இடத்துக்கு வந்த முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதி வான் எஸ். எச். மக்ரூஸ் பிரேத பரிசோத னைக்கு உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து அவரின் சடலம் முல்லைத்தீவு பொது மருத்துவமனை யில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. நேற்றைய தினம் சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா பிரேத பரிசோதனையை நடத்தினார். கழுத்து நெரிக்கப்பட்டதால் மரணம் சம்பவித்ததாக அவர் தனது அறிக்கை யில் குறிப்பிட்டிருந்தார்.

பணத்துக்காகவே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று தெரி வித்த நட்டாங்கண்டல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

கனடாவுக்கு செல்வதற்காக குறித்த இளைஞர் அந்தப் பணத்தை கொண்டு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

# இலங்கை வருகிறார் பிரதமர் மோடி பூநகரி திட்டத்தை தொடக்கி வைப்பார்!

கொழும்பு, ஒக. 01

இந்த மாதம் இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பூநகரி - கௌதாரிமுனையில் அதானி குழுமம் அமைக்கும் காற்றாலை நிர்மாணப் பணிகள் உள்ளிட்ட பல வேலைத்திட் டங்களை ஆரம்பித்து வைப்பார் என்று தெரிய வருகின்றது.

ஒகஸ்ட் மாதத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருவார் என்று கூறப்பட்டது. அண்மையில், இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் மோடி யின் வருகையை உறுதி செய்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை தொடர வைப்பதில் இந்திய தலையீடுகள் அதிகம் உள்ளன என்று கூறப்படுகின்றது. அத்துடன், எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இணைக்கும் முயற்சியில் தொடர்ந்து இந்தியா செயல்பட்டு வருகிறது என்றும் கூறப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்த லுக்கு முன்னர் இலங்கை வரும் ஜனாதி பதி இரு தரப்பினரையும் சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், மோடியின் பயணத்தின் போது எட்கா, ராமர் பாலம் அமைத்தல், மின் இணைப்பு, எரிபொருள் பரிமாற்ற ம், விமான நிலையங்களை குத்தகைக்கு வழங்கல் என 10 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன என்று விமல் வீரவன்ஸ எம். பி. கூறியுள்ளார். (ஐ)

# பெரமுனவின் உறுப்புரிமையை முடிந்தால் நீக்கிக்காட்டுங்கள்!

## திலும் அமுனுகம சவால்

கொழும்பு, ஒக. 01

முடிந்தால் பொதுஜன பெரமுன எமது உறுப்புரிமையை நீக்கிக் காட் டட்டும் என வர்த்தகம் மற்றும் முத லீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம சவால் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டின் பின்னர் இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடு கையில்,

உறுப்புரிமையை நீக்குவது இலகு வான விடயமல்ல. அவர்களால் அவ் வாறு எதனையும் செய்ய முடியாது. மாறாக அதற்கான நடவடிக்கை எடுக் கப்பட்டாலும் நீதிமன்றத்துக்குச் சென் றால் வழக்கு விசாரணைகள் குறுகிய காலத்துக்குள் நிறைவடையாது. எனவே சட்ட ரீதியாக எமது உறுப்புரிமையை நீக்குவதற்கு முன்னரே பாராளுமன்றத் தின் ஆயுட்காலமும் நிறைவடைந்து விடும்.

நாட்டில் அரசியல் நெருக்கடிகளால் வன்முறை உச்சகட்டத்திலிருந்த போது பிரதமர் பதவியை ஏற்குமாறு விடுத்த அழைப்பை எவரும் ஏற்கவில்லை.

அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் நானும் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவிடம் கூறி ரணில் விக்கிரமசிங்கவை அழைத்தோம். அவர் சவாலை ஏற்று அதில் வெற்றியும் கண்டுள்ளார். அவ்வாறிருக்கையில் கறியில் உள்ள கறிவேப்பிலையை போன்று இறுதியில் அவரை தூக்கி எறிந்து விட முடியாது. மொட்டில் மலர் பகுதி ரணில் விக்கிரமசிங்கவிடமே இருக்கிறது. காம்பு மாத்திரமே மறுபுறம் உள்ளது. எமக்கு மக்கள் அளித்த வாக்கு களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு நிச்சயம் இருக்கிறது. ஆனால், அவரது வெற்றிக் காக பாடுபட்ட அனைவரும் தற்போது ஜனாதிபதியுடனேயே இருக்கின்றோம் - என்றார். (ஐ)

# எரிபொருள் விலையில் திருத்தம் கிடையாது!

கொழும்பு, ஒக. 01

மாதாந்த எரிபொருள் விலைத் திருத் தத்தின் கீழ் இம்முறை விலையில் மாற் றம் இருக்காது என்று இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள் ளது.

இதன்படி, ஏற்கனவே உள்ள விலைக ளுக்கே எரிபொருட்கள் விற்பனை செய் யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### எனது...

தெரிவித்துள்ளார்.

பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பி வைத் துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதை விட வேறு மாற்றுவழி எனக்கு தெரியவில்லை. அந்த வகையில் மனச்சாட்சிக்கு நேர்மை யாக சிந்தித்து ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக செயல்படுகிறேன். எது எப்படி இருப்பினும், நான் தொடர்ந்தும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பி னரே. எனது முன்னுதாரண - மானசீகத் தலைவர் மகிந்த ராஜபக்ஷவே என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

### மாகாண...

இருக்கிறது. இந்த நிலையிலேயே நேற்றைய தினம் மாகாண சபைகள் தேர் தலை பழைய முறைமையில் அதாவது, விகிதாசார முறைமையில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது உரையில், மாகாண சபைகள் தேர்தலில் பெண்கள், இளைஞர் களின் பிரதிநிதித்துவம் அதிக ரிக்கப்பட வேண்டும். அத்துடன், பாராளுமன்ற உறுப் பினர் பதவியை இழக்காமல் மாகாண சபைகளுக்கு போட்டியிட வாய்ப்பு கிடைக் கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஒன் பது பேருடன், அரசாங்கத்தின் கீழ் நிதி அமைச் சர்கள் குழுவும் உள்ளது. அரச சபை ஒன்றையும் முன்மொழியவிருக்கி றோம். அதில் ஜனாதிபதி, பிரதமர், கட்சித் தலைவர்கள், முதலமைச்சர்கள் அங்கம் வகிப்பர். ( 2017 ஆம் ஆண்டு அரசியலமைப்புத் திருத்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரை களின்படி இதனைச்செய்யலாம்.)

தமிழ் கட்சிகளும் இணக்கம் தெரிவித் துள்ளன. பொலிஸ் அதிகாரம் பற்றி பின்னர் பேசலாம், இந்த நடவடிக்கை களை இப் போது நடைமுறைப்படுத்து வோம் என்று அறிவித்துள்ளோம். விவசாயம் நவீனமய மாக்கல், பாட சாலைக் கல்வி, சுற்றுலா பொறுப்புகள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். எம்மிடம் பெரிய பணிக்குழு ஒன்று உள்ளது. மத்திய அரசாங்கம் 9 மாகாண அரசாங்கங்கள் என்று 10 அர சாங்கங்கள் ஊடாக நாட்டை முன்னேற் றிச் செல்ல எதிர்பார்க்கிறோம்." - என் றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# 40,000 ஓய்வுபெற்ற படையினர் நாட்டை மீட்க அநுர அணியில்

## ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கூறுகிறார்



கொழும்பு, ஒக. 01

**வாழ்க்கையின் எல்லாவற்றையும் அர்ப்பணித்து நாட்டுக்காக பணியாற்றியபோதும் இறுதியில் கவலைக்கிடமான நிலையில் தான் நாடு உள்ளது. இந்த நிலையிலிருந்து நாட்டை விடுவித்துக் கொள்வதற்காக இரண்டாவது நடவடிக்கை என்ற வகையில் 40, 000 ஓய்வுபெற்ற படையினர் முன்வந்திருக்கின்றனர்- இவ்வாறு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.**

நாங்கள் பல வருடங்களாக உயிரைப் பணயம் வைத்து சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற பின்னர் நாடு அடைந்துள்ள கவலைக்கிடமான நிலைமையை தெளிவாக விளங்கிக் கொண்டோம். எங்களை இந்த நிலைமைக்கு கொண்டுவர தரைப் படை, வான்படை மற்றும் இலங்கைக் கடற்படை மேற்கொண்ட முயற்சியும் பிரயத்தனமும் சம்பந்தமாக எங்களுடைய மனங்களில் மதிப்பும் அபிமானமும் என்றென்றும் இருக்கிறது எனவும் அவர் கூறினார்.

ஓய்வுபெற்ற முப்படையினர் கூட்டமைப்பின் ஊடகச் சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அருண ஜயசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாடு அடைந்துள்ள நிலைமை பற்றி நீண்ட ஆய்வினை மேற்கொண்ட பின்னர் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றுசேர்ந்து இரண்டாவது நடவடிக்கைக்கு உயிர் கொடுக்க 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒரு சிறிய குழுவொன்று உருவானது. இப்போது, ஓய்வுபெற்ற முப்படை அங்கத்தவர்கள் சுமார் 40 ஆயிரம் பேர் எம்முடன் இணைந்திருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கத்தக்க “அதிட்டன” மாநாட்டினை நடத்தி எங்களுக்கு இருக்கின்ற பொறுப்புக்களையும் கடமைகளையும் பற்றி ஓய்வுபெற்ற முப்படை அங்கத்தவர்களுக்கு தெளிவுபடுத்திக் கூறினோம்.

அதனூடாக அவர்கள் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் முன்நோக்கிய பயணத்தில் இணைந்துள்ளார்கள். 2023 இல் நிலவிய பின்னணிக்கிணங்க தேசிய பாதுகாப்பு சம்பந்தமான அடிப்படைக் கொள்கை வெளியீட்டினை சமர்ப்பித்தாலும் நடப்பு நிலைமைக்கு இணங்க இற்றைப்படுத்தி மீண்டும் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

கடந்து சென்ற இந்தக் காலப் பகுதிக்குள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயலாற்றுதல் சம்பந்தமாக எம்மீது முன்வைக்கப்பட்ட சவால்களை வென்றெடுத்து திடசங்கற்பத்துடன் செயலாற்றி வருகிறோம். அனைவரும் நிலை தளராமல் ஒரே நோக்கத்துக்காக ஓய்வுபெற்ற முப்படை அங்கத்தவர்கள் என்ற வகையில் தேசிய மக்கள் சக்தியுடன் முன்னோக்கி பயணிக்கிறோம்.

வாழ்க்கையின் எல்லாவற்றையும் அர்ப்பணித்து நாட்டுக்காக கடமை புரிந்தாலும் இறுதியில் பார்க்கும் போது கவலைக்கிடமான நிலைமைக்கு இழுத்துப்போடப்பட்டுள்ள நாட்டை விடுவித்துக் கொள்வதற்காக இரண்டாவது நடவடிக்கை என்ற வகையில் நாங்கள் முன்வந்திருக்கிறோம்.

தேசிய மக்கள் சக்தியால் கட்டியெழுப்பப்படுகின்ற மக்கள் அரசாங்கத்தின் மூலமாக முப்படை அங்கத்தவர்களுக்கு கௌரவமாகவும் அபிமானத்துடனும் உயிர் வாழ்வதற்கான இடமளிப்பது இந்த அரசியல் இயக்கத்தின் கொள்கையாக அமைந்திருக்கிறது. இளைப்பாறிய முப்படை அங்கத்தவர்கள் அனுபவித்து வருகின்ற பொருளாதார அழுத்தத்தின் மத்தியில் ரஷ்யா, உக்ரைன் போன்ற நாடுகளில் மிகவும் அபாயகரமான தொழில்களில் கூட ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டுக்கு தனித்துவமான பங்களிப்பை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ள ஒழுக்கம், ஒழுங்கமைந்ததன்மை, அர்ப்பணிப்பு ஆகிய பண்புகளைக் கொண்ட அவர்களை நாட்டுக்கான விசேட பணிகளில் ஈடுபடுத்த முடியும் - என்றார். (எ)

# ஏ-9 வீதியில் நேற்று விபத்து தாயும் மகளும் படுகாயம்!

கிளிநொச்சி, ஒக. 01

டிப்பர் - மோட்டார் சைக்கிள் மோதியதில் தாயும் மகளும் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதியில் ஏ - 9 வீதியில் நேற்றுக்காலை இந்த விபத்து இடம்பெற்றது. யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த தாயும் மகளும் இத்தாவில் பகுதிலுள்ள பாடசாலைக்கு திரும்ப முற்பட்ட வேளை எதிரே வந்த டிப்பர் மோதியதில் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பளை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆங்கில தின போட்டி ஒன்றுக்காக தனது மகளை தாய் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றி சென்ற வேளையே குறித்த விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் நீர் விநியோகம் இனிமேல் மட்டுப்படுத்தப்படும்

கிளிநொச்சி, ஒக. 01

கிளிநொச்சியில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக பொது மக்களின் நீர்ப்பாவனை வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது.


கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீரை 24 மணிநேரமும் விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இனிவரும் நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட நேர ஒழுங்கில் நீர் வழங்கப்படும் என கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

தற்போது தொடர்ச்சியாக, வெப்பமான காலநிலை நிலவிவருவதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் அதிகாலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நீர் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் குறைந்த அழுத்தத்திலும் நீர் விநியோகிக்கப்படுவதனால் பொது மக்கள் நீரை சிக்கனமாகவும், சேமித்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# மஞ்சள் கடத்தி வந்த இருவர் கடற்படையிடம் மாட்டினர்!



புத்தளம், ஒக. 01

புத்தளம், கற்பிட்டி - உச்சமுனை கடற்கரைப் பகுதியில் படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மஞ்சள் பொதிகளுடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடல் மார்க்கத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே

கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 44 வயதுடைய இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 749 கிலோ கிராம் மஞ்சள் (17 பொதிகள்) மற்றும் படகு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கா சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

# தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம்

கொழும்பு, ஒக. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோருக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு முக்கிய அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொது மக்களின் இதர தேவைகளுக்காக தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர்களின் தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பான தகவல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க முடியும் என சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் தகவல்கள் போலியானதாகும்.

எனவே, தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர் தேர்தல் ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள www.elections.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ தகவலின்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நள்ளிரவு 12. 00 மணிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டத்தின் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலக அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சம்பிக்கவின் ஆதரவாளர்கள் ஐ. தே. கவில் இணைந்தனர்

கொழும்பு, ஒக. 01

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணியின் சிரேஷ்ட உப தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த சிறீ வர்ணசிங்க மற்றும் அவரது மனைவி கல்காரி சுபோதா அதிகாரிய ஆகியோர் நேற்று ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தனர்.

இவர்கள் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டாரவிடமிருந்து கட்சி அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டனர். (எ)

# இஸ்மாயில் ஹனியே கொலை ஜனாதிபதி ரணில் கண்டனம்



கொழும்பு, ஒக. 01

ஹமாஸ் போராளிகள் அமைப்பின் அரசியல் தலை வர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் கொழும்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியேவின் படுகொலைக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், இவ்வாறான செயல்பாடுகளை தாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லையெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.